2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

**தமிழ் நாடு கால்நடை உதவியாளர் சங்க நிர்வாகக் குழு தலைமைச் செயலகத்தின் முன்பு உண்ணாவிரதம் இருக்க எடுத்திருக்கும் முடிவு குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தாசன் அவர்கள் சட்டப்பேரவை விதி 42-ன் கீழ்—

"தமிழ்நாடு கால்நடை உதவியாளர் சங்க நிர்வாகக் குழு கால்நடை உதவியாளர்களின் கோரிக்கைகள் தீர்க்கப்படாமலிருப்பது குறித்து வருகிற மார்ச் 16-ம் நாளன்று ஊர்வலமாக வந்து தமிழக அரசு தலைமைச் செயலகத்தின் முன்பு உண்ணாநோன்பு மேற்கொள்வதென்று முடிவெடுத்துள்ளதால் எழுந்துள்ள அவசரமும், பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை விவாதிக்க அவையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

இது அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது. மேலும் உண்ணாவிரதம் இருப்பது போன்ற நிகழ்ச்சி இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைப்பதற்கான ஒன்றாக இருக்காது என்று பல தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் நான் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

**கீழையூரில் தி.மு.க.வினர் ஏற்றிய கொடியை வெட்டி வீழ்த்தியதும், விசாரிக்க வந்த காவல் துறையினர் தாக்கப்பட்டதும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. மலைச்சாமி அவர்கள் உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த ஒரு நிகழ்வை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் 'மேலூர் வட்டம், கீழையூரில் பொங்கலன்று திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் ஏற்றிய கொடியை வெட்டி வீழ்த்தியவர்களை விசாரிக்க வந்த கீழவளவு காவல் நிலையத்தைச் சார்ந்த தலைமை போலீஸ்காரரையும், போலீஸ்காரரையும் பலர் சேர்ந்து தாக்கிக் காயப்படுத்தி, சட்டைகளைக் கிழித்து எறிந்த கொடுமையான நிகழ்ச்சியினைப்பற்றிய' அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 14—1—1970-ம் நாட் காலை 9 மணியளவில் கீழவளவு காவல் நிலைய எல்லைக்குள் அமைந்த கீழையூர்க் கிராமத்தைச் சேர்ந்த சிலருடன் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் சிலர், அக் கிராமத்தில் அரிசனச் சேரிக்குள் சென்று ஊராட்சிக் கிணற்றுக்கு அருகில் தி.மு.க. கொடியை ஏற்றினர். ஒரு மணி நேரத்திற்குப் பின், அந்த இடத்திலிருந்து அக்கொடி அகற்றப்பட்டிருப்பதைக் கண்டனர். இவ்வாறு கொடியை அகற்றியது யார் என்று அவர்கள் வினவினர். அந்த நேரத்தில்

அந்தக் கிராமத்தில் வாழும் ரிசவ வகுப்பைச் சேர்ந்த சிலரும் காங்கிரஸ் ஆதரவாளர்கள் சிலரும் இவர்களுடன் சண்டையிட்டு அவர்களைத் தடியாலும், கையாலும் அடித்தனர்.

கீழவளவு காவல் நிலையத்தைச் சேர்ந்த தலைமைக் காவலர் எண் 1495 காதர் மீரான், பொங்கல் திருநாள் சம்பந்தமாக அக் கிராமத்திற்கு வழக்கமாகக் கடமையாற்றச் சென்றார் ; இக் கலகம் பற்றிக் கேள்விப்பட்டு அவர் அந்த இடத்திற்கு விரைந்தார். குற்றவாளிகள், தி.மு.க. உறுப்பினர்களை முரட்டுத்தனமாக இழுத்து அடித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். உடனே அவர், மேலும் குற்றவாளிகள் அவர்களை அடிக்கவொட்டாமல் தடுக்க முயன்றார். குற்றவாளிகளில் ஒருவரிடமிருந்து கத்தியைப் பறிக்கவும் முயன்றார். அக் குற்றவாளி, தலைமைக் காவலரை கையாலும், தடியாலும் அடித்ததுடன், அவரது காக்கி நிகரான்டையையும் கிழித்தார் ; அவரது உடலில் 10 இடங்களில் சாதாரணக் காயங்களை ஏற்படுத்தினர். இவ்வாறு, தலைமைக் காவலர் சட்டப்படி செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றுவதனின்றும் குற்றவாளி அவரைத் தடுத்தார். ராமையா என்னும் தி.மு.க. உறுப்பினருக்கும் 3 இடங்களில் சாதாரணக் காயம் ஏற்பட்டது.

தி.மு.க. உறுப்பினர் ராமையா கொடுத்த குற்றச்சாட்டின் மீது, கீழவளவு காவல் நிலையத்தில் இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பின் 143, 323, 370, 332-வது பிரிவுகளின் கீழ் ஒரு வழக்கு (குற்றம் எண். 6/70) பதிவு செய்யப்பட்டது.

காயமடைந்த தலைமைக் காவலர் (எண் 1495) காதர் மீரானும் ராமையாவும் மேலூர் அரசு மருத்துவ மனையில் புற நோயாளிகளாகச் சிகிச்சையளிக்கப் பெற்றுள்ளனர். குற்றவாளிகள் பத்துப் பேரில் நால்வரைக் காவல் துறையினர் கைது செய்தனர் ; எஞ்சிய 6 பேரும் 19—1—1970-ல் மதுரை கூட்டு முதல் வகுப்பு குற்றத்துறை நீதிபதி (எண் II) முன்னால் சரணடைந்தனர். குற்றவாளிகள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏதேனும் வன்முறைச் செயல்கள் நடப்பதைத் தடுக்கும் பொருட்டு அக் கிராமத்தில் காவற் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டது. இப்போது நிலைமை அமைதியாக உள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைமை போலீஸ்காரரை கிராமத்தில் உள்ள கிராம ஊழியர்கள், கிராம சேவக்குகளே தாக்கினார்கள் என்கிற தகவல் கிடைத்திருக்கிறதே, அரசாங்க ஊழியர்களை அரசாங்க ஊழியர்களே தாக்கலாமா? அந்த கிராம ஊழியர்கள், கிராம சேவக்குகளின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அரசாங்க ஊழியர்களை அரசாங்க ஊழியர்களே தாக்கலாமா என்றார். தாக்குவது என்கிற போது ஒருவரை ஒருவர் தாக்குவதே கொடுமையானதாகும். வழக்கு விசாரணையில் இருப்பதால் மேற்கொண்டு எந்த விளக்கமும் அளிக்க இயலாமல் இருக்கிறேன்.